பொது சன நூலகம்

விலை: சதம் 75

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

ஈழநாடு
THE EELANADU
மலர் 23 ஆடி 10 யாழ்ப்பாணம் — றம்ழான் 22 சனிக்கிழமை — இதழ் 161 25-7-1981

தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஒடுகளையே
பாவியுங்கள்
மு.தா.பொன்னம்பலம்
36, கே கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
போன்: 7193

★ ஷெல்டன், தொண்டமான் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை

# "தனிநாடு கோரும் உரிமை தமிழருக்குண்டு!"

## சபையில் தொண்டமான்

### "ஜனாதிபதியின் நல்நோக்குக்கு குந்தகம் வேண்டாம்" நெவில் வாதத்துக்கு 'தொண்டா' சாட்டை

(நமது நிருபர் சு. மகாலிங்கசிவம்)

"தனிநாடு கோரும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு. இன்றைய ஐக் இலங்கையின் அரசியல்அமைப்புச்சட்டத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தும், சர்வஜன வாக்குரிமையின் மூலமும் தனிநாடு அமைக்கும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு. 'தனிநாடு' கோரும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர் என்று ஐ. தே. கட்சியின் கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களது போராட்டம் சாத்வீகமானது என்றே அவர்கள் கூறுகிறார்கள்."

இவ்வாறு கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"இங்கு பலர் சரித்திரம் பேசினார்கள், வரலாறு பேசினார்கள். சரித்திரம் பேசுவதற்கு நான் சரித்திர ஆராய்ச்சியாளன் அல்ல.

### தமிழரும் சிங்களவரும்

இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒரு காலத்தில் இந்தியாவிலிருந்து வந்தவர்களே என்பதை நான் இங்கு கூறவிரும்புகிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின 77ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில்-

"தமிழ் மக்களுக்கு சில மனத்தாங்கல்கள் உண்டு. அவை தீர்க்கப்படவேண்டும். அந்த மனத்தாங்கல்கள் தீர்க்கப்படாத பட்சத்திலேயே அவர்கள் 'தனி

### 'கூட்டணியின் போராட்டம் சாத்வீகமானது!'

நாடு' கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாம் ஆட்சிக்கு வந்ததும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முன்னுரிமை வழங்குவோம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது" ஐ. தே. க. பதவிக்கு வந்ததும் தமிழ் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு சில சுமுகமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னைய கொள்கை எப்படி இருந்தாலும் அண்மையில் நடைபெற்ற அபிவிருத்தி சபைத் தேர்தலில் பங்குபற்றிக் கூடியளவு ஒருமன மாற்றம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் இருஇனங்களுக்கு மிடையிலான நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சிக்கு இவ்விஜயம் எந்த அளவில் உதவும் என்பதோ எந்த அளவில் அவசியம் என்பதோ எனக்குத் தெரியவில்லை. உண்மையில் நிலைமையை துஷ்பிரயோகம் செய்கிறீர்கள் என்றே கருது

[6-ம் பக்கம் பார்க்க]

## "அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்"

-டாக்டர் நெவில்

[கொழும்பு)

''பிரிவினை கோரும் கட்சிகளைத் தடை செய்யும் விதத்தில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்'' என்று பாணந்துறை எம். பி டாக்டர் நெவில் பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது டாக்டர் நெவில் பெர்னாண்டோ பதிலளித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இப்பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர், அரசு ஒரு ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும். அரசியலமைப்பைத் திருத்தி பிரிவினையை தடைசெய்வதன் மூலம் பிரிவினை கோரும் கட்சிகளைத் தடை செய்யவேண்டும். தனிநபர் பிரிவினை கோரினால் அவரது பிரஜா உரிமை ரத்துச் செய்யப்பட வேண்டும். அது மட்டுமன்றி அவருக்கு மரண தண்டனை வழங்கும் வகையில் 'பீனல் கோட்' திருத்தப்பட வேண்டும்'' [ம]

## சபாநாயகர் பதில் ஜனாதிபதி

]கொழும்பு]

இளவரசர் சார்ள்ஸ்சின் திருமணவைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன லண்டன் செல்லவுள்ளதால். பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் அல் ஹாஜ் பாக்கீர் மாக்கார் பதவியேற்கவுள்ளார்.

அரசியலமைப்புச்சட்டத்தின் ஏழாம் அத்தியாயம் பிரிவு 30[4], பிரிவு 40[1 ஏ] யின் கீழ் இவர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்பார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சபாநாயகரொருவர் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்பது இதுவே முதல் தடவையாகும். [ம-வெ]

கொழும்பில் மகாநாடு நடத்த அனுமதிமறுப்பு!

## ஜெர்மன் பத்திரிகையாளர் திருப்பி அனுப்பப்பட்டனர்

[கொழும்பு]

மேற்கு ஜெர்மனியிலிருந்து நேற்று முன்தினம் நாடுதிரும்பிய 128 தமிழ் இளைஞர்களுடன் வந்த ஜெர்மன பத்திரிகையாளர்கள் இலங்கையிலுள்ள மேற்குஜெர்மன் தூதரகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் மகாநாட்டை நடத்த அனுமதிக்கப்படாமல் நேற்று திருப்பி அனுப்பப்பட்டனர்.

தமிழ் இளைஞர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தபோது இலங்கைப் பொலிசார் அவர்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர் என்றும் பூந்த இளைஞர்கள் உத்தியோகபூர்வமாகவே இங்கு அழைத்துவரப்பட்

[6ம் பக்கம் பார்க்க]

## 'ஆலாலுக்கு' இன்று வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரத்துக்கு இன்று சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும்.

ரயில் மார்க்கமாக இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேரும் திரு. ஆலாலசுந்த

[6-ம் பக்கம் பார்க்க]

## பிரேரணை நிறைவேறியது

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கையில்லாப்பிரேரணை மீது பாராளுமன்றத்தில் நேற்று இரவு 7-25க்கு வாக்கெடுப்பு நடந்தது.

அமைச்சர் கே. டபிள்யூ தேவநாயகம், திருமதி ரங்கநாயகி பத்மநாதன், அமைச்சர் செ. இராசதுரை, டாக்டர் தஹநாயக்கா உட்பட 121 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர்.

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், பிரதி நீதியமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா ஆகிய இருவரும் சபையில் இருந்தும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை [ம]

∴ நூற்றுக்கு நூறு சிறந்த முறையில் ஸ்ரீறியோ போனிக் ஒலி அமைப்பில் உங்கள் விருப்பத்திற்கு பாடல்களைப் பதிவு செய்ய விஜயம் செய்யுங்கள்!

விக்ரர் அன் சன்ஸ்

100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

∴ மற்றும் மோட்டார் றிவைன்டிங், மின்சாரத்தினால் இயங்கும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் உங்கள் திருப்திக்கேற்ப திருத்திக் கொடுக்கப்படும்.

∴ சிகரட் பாவிப்பவர்களுக்கு நற்செய்தி! அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க சிகரட் லயிட்டர்களுக்கு காஸ் நிரப்பிக் கொடுக்கப்படும்.

தொலைபேசி: 7346

# வெளிநாட்டு அரசாங்கங்களை மாற்றி அமைப்பதில் அமெரிக்கா முக்கியபங்கு வகிக்கிறது

## 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் பிரமுகர்கள் கண்டனம்

லண்டன் ஜூலை 24

"வெளிநாடுகளில் அரசாங்கங்களை மாற்றி அமைப்பதில் அமெரிக்கா முக்கிய பங்கு வகித்து வருகிறது இதற்கு அமெரிக்க அதிபர் திரு றேகனின் வெளிநாட்டுக் கொள்கையே காரணம்."

இவ்வாறு 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் வெளி வந்த விளம்பரம் ஒன்றின் மூலம் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபரின் வெளிநாட்டுக் கொள்கையைக் கண்டித்து 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள முழுப்பக்க விளம்பரத்தில் அமெரிக்காவின் வெளிநாட்டுத் தலையீடு குறித்து விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரபுக்கள்சபை, ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், தொழிற்சங்க வாதிகள் ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும் இந்த விளம்பர அறிக்கையில் கைச்சாத்திட்டனர். [இ]

# இந்திரா காங்கிரஸ் அங்கீகாரம்

புதுடில்லி, ஜூலை 24

இந்திரா காங்கிரஸ் கட்சி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியாக தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

'அரஸ்' காங்கிரஸ் கட்சிக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு மிடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்தே இம்முடிவை தேர்தல் கமிஷன் வழங்கியுள்ளது. [வெ]

# "சோவியத் விமானத்துடன் மோதி எரிந்த விமானம் எது?"

மாஸ்கோ, ஜூலை 24

ஈரானிலிருந்து புறப்பட்ட இனந்தெரியாத விமான மொன்று சோவியத் எல்லைக்குள் பிரவேசித்து அந்நாட்டின் விமானமொன்றுடன் மோதி எரிந்து சின்னாபின்னமாகியுள்ளதாக சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' அறிவித்துள்ளது.

இது பொதிகளை ஏற்றிச் செல்லும் தமது நாட்டின் விமானமென்று ஆர்ஜன்டீனா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்விமானத்தின் மேலதிக விபரங்கள் பற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மாஸ்கோவிலுள்ள ஆர்ஜன்டீனா தூதரகத்தை அந்நாட்டு அரசாங்கம் கேட்டுள்ளது.

எரிந்து சின்னாபின்னமாகிய இவ்விமானத்தின் விமானிகளுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறியஆர்ஜன்டீனா அரசாங்கம் ஆவல் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [வெ]

# இஸ்ரேலுக்கு பாதுகாப்பு அளிப்பது அமெரிக்காவின் கடமை

வாஷிங்டன், ஜூலை 24

இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உதவி அளிப்பது அமெரிக்காவின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டுத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இஸ்ரேல் லெபனான் மீது மேற்கொண்டு வரும் தாக்குதலை அமெரிக்கா பலமாகக் கண்டித்துள்ளது.

தென்லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திவருவதால் அமெரிக்கா இஸ்ரேலுக்கு நவீன போர் விமானங்களை வழங்குவதை இடைநிறுத்துவதென்றும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது தெரிந்ததே. [இ]

# ஜனாதிபதி வேட்பாளர் கொலை

தெஹ்ரான் ஜூலை 24

ஈரானில் இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடவிருந்த வேட்பாளரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.


ஹசன் பெஸட்ஸ்கி என்ற வேட்பாளரே கொலைசெய்யப்பட்டவராவர்.

இவர் ஈரானில் சிலதினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தில் பலியான ஈரானிய மதத்தலைவர்களிலொருவரும் பிரதம நீதியரசருமான அயத்தொல்லா பெஸட்ஸ்கியின் மருமகனாவர்.

தீவிரவாத முஸ்லிம் கொள்கைகளை கடைப்பிடிக்கும் குழுவினரே இக்கொலைக்குக் காரணமென கருதப்படுகிறது.

ஈரானிய அரசாங்கம் தீவிரவாத முஸ்லிம்களுக்கு எதிராகக் கடும் அடக்கு முறைகளைக் கையாண்டு வருகிறது. (வெ)

# 120-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் புனித ஆலயம்



கடல்அலைகள் கொஞ்சி விளையாடும் நகர் குருநகராகும். இந் நகரின் மையமாக அமைந்து, வானளாவ முட்டிக்கொண்டிருக்கிறது புனித யாகப்பர் ஆலயம். 120வது ஆண்டின் நிறைவை நினைவு கூரும்முகமாக இந்த ஆலயத்தின் முகப்புவேலைகளும் 'போர்ட்டிக்கோ' மண்டபமும் பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் இப்பொழுது கட்டப்பட்டுள்ளன.

ஆலய வேலைகள் அனைத்தும் சிற்பவேலைகளாயிருந்தாலும் சரி கட்டிடவேலைகளாயிருந்தாலும் சரி, குருநகர் மக்கள் யாரிடமும் உதவிக்குப் போகமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் அனைவரையும் தன்னகத்தேகொண்ட மக்கள் கூட்டம் இங்கே உண்டு. உடற்பலத்திலும் சிறந்து விளங்கும் இம் மக்கள், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்திற்கு முன்னர் தமிழ் அரசர்கள் அரசாண்டகாலத்தில் நாட்டைக் காக்கும் படைப்பிரிவில் முக்கிய இடத்தை வகித்தனர் என்று "யாழ்ப்பாண வைபவமாலை" குறிப்பிடுகின்றது. பின்னர் சத்திய திருமறையில் திருமுழுக்கும்பெற்று கத்தோலிக்கரானார்கள். ஒல்லாந்தர் இவர்களைக் கொடுமைப்படுத்தியபோதிலும் தங்கள் விசுவாசத்தில் சிறிதும் தளரவில்லை. யோசவாஸ் முனிவர் காலத்திலும் குருநகர் மக்கள் எவ்வாறு திருமறையைப் பேணிக்காத்தனர் என்று வரலாற்றுக்குறிப்புகளிலிருந்து அறியமுடிகின்றது.

### சிற்றரசு

இன்று கம்பீரமாக எழுந்து காட்சியளித்துக் கொண்டிருக்கும் ஆலயத்தின் அடிக்கல் 1861ம் ஆண்டு ஆடித் திங்கள் 25ம் திகதி வணக்கத்திற்குரிய பிதா மோறாய் அடிகள் நாட்டினார். இவ்வாலயத்தின் அமைப்பை தன் சொந்தமூளையினாலும் அனுபவத்தாலும், கம்பியேலன் எதுவும் இல்லாமலும் குருநகரைச் சேர்ந்த மேஸ்திரி சந்தியோ என்பவர் கட்டி முடித்தார்.

ஆலயத்தின் மத்தியில் 1783ம் ஆண்டு இறந்த வணபிதா ஜெரீபல்ரே அடிகளாரின் நினைவுச்சின்னம் ஒன்றும் உள்ளது. காலத்திற்குக்காலம் ஆலயத்தில் சிறப்பானவேலைகள் செய்யப்பட்டு ஆலயச் சிறப்பினை பிரதான வீதியால் செல்வோர் அனைவரும் காணலாம். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நவநாட்களில், மறையுரைகளை தமிழ்நாட்டிலிருந்து யேசுசபையைச் சேர்ந்த அப...


(5-ம் பக்கம் பார்க்க)




மீண்டும் வந்துள்ளது

Pilot BALL POINT

பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்




சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

விநியோகஸ்தர்கள்: ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பிரமிளா
கவரிமான் (கலர்)

வெல்லி (வல்வெட்டித்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் - படாபட்
6ல் இருந்து 60 வரை


## 120-வது

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

குலதாசன் அடிகளார் வந்துள்ளார்.

நேற்றுமாலை திவ்விய நற்கருணைசுற்றுப்பிரகாரமும், இன்று 25ம் திகதி காலை திருநாள் பாடற்பூசையும் மாலையில் திருச்சுருப தேர்ப் பவனி அலங்கரிக்கப்பட்ட வீதியூடாக வலம்வருதலும் வணவேடிக்கை காட்சிகளும் அமையும்.


வெலிங்டன்
Daily 10-30, 2-15, 4-45
7-00 & 9 30
YOU FORGOT
WHAT TERROR
WAS LIKE
ITS BACK

ரீகல் யாழ் நகர்
Daily 10-30, 2-15, 4-45
7-00 & 9-30
JAWS

கடைசித் தினம்— 26-7-81
சாந்தி (யாழ்நகர்) 10-30 2-30, 6-30, 9-45
சிவாஜி, K. R விஜயா நடித்த
தர்மராஜா (கலர்)
27th—28th "SHARKS TREASURE"
வெகு விரைவில் வீ. பி. கணேசனின் 'நாடு போற்ற வாழ்க'

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-00, 7-00, 9-30
The Man From Hong Kong
(Color-Karate Film)
வெகு விரைவில்!
சங்கராபரணம்

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி, ஜெயசித்ரா, கமலஹாசன், மஞ்சுளா, நாகேஷ்
சத்யம்
(புத்தம் புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

வெற்றிகரமான 2-வது வார
ஹவுஸ்புல் காட்சிகளாக
ஓடிக்கொண்டிருக்கின்றது
ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர், லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மன் கலர்)

வின்சர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 9-30
அநேகரின் வேண்டுகோளை முன்னிட்டு
மீண்டும் 26-7-81 வரை மட்டும் திரையிடப்படுகிறது
"MOVING VIOLATION"
(Color)
27-7-81 & 28-7-81 only
Charltion Heston and James Coburn
Meet in a Hard - Hitting Tale of the old West
THE LAST HARD MEN
[பழிக்குப் பழி]
Color





★

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஆளணி முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கம், கிளிநொச்சி - பரந்தன் ரோட்டறிக் கழகத்தின் நடப்பாண்டுக்கான தலைவர் பதவி ஏற்பு வைபவத்தின்போது பிடிக்கப்பட்ட படத்தில் பிரதமவிருந்தினர் ரோட்டறி மாவட்ட ஆளுனர் திரு. சார் றாசக் வலது புறத்தில் காணப்படுகிறார்.

★

## இன்றைய பலன்

ஆடி மாதம் 10ம் திகதி

சனிக்கிழமை

(25-7-81)

மேடம்: வாழ்க்கையில் சிரமங்கள் அதிகரிக்கும், குறுக்கு வழியில் இறங்குவதால் வழக்கு விவகாரங்களில் சிக்கிக்கொள்ள நேரிடலாம், அதிகபேச்சைத் தவிர்த்து அமைதியுடன் இருக்கவும்.

இடபம்: இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், வாக்குவன்மையின்மூலம் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

மிதுனம்; பக்கத்திலேயே வடுகுழி தோண்டுவதற்கு எதிரிகள் முனைவர், பண விவகாரத்தில் மோசடி நடக்கலாம், வாகனப் போக்கினால் ஆபத்துக்கள் ஏற்படலாம், அவதானம் வேண்டும்.

கடகம்: பலன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம், வெளியிடத்தொடர்புகள் பெருகும் கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும், கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு, வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும், கடமையில் ஆர்வம் பிறக்கும், டாக்டர்களுக்குச் சலகாரம் பெருகும், நிம்மதியான தினம்.

கன்னி: தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும், நண்பர்களே வாரிவிடக் கூடும். இருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம். சிறப்பான தினம்.

துலாம்: குடும்பவாழ்க்கை இன்று சுமுகமாக இருக்கும், தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார், டாக்டர்களுக்கு சிறப்பான தினம்.

விருச்சிகம்: எதிர்பார்த்த இடங்களில் தடைகள் ஏற்பட்டுவரும், தொழில்துறையில் அவ்வளவு திருப்தியளிக்கக் கூடியதாய் இல்லை, நண்பர்கள் நச்சரிப்பு அதிகரிக்கும்.

தனுசு: அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும், அறவழியில் ஆர்வம் பிறக்கும், ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

மகரம்: பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கலாம், சிலருக்கு புதிதாகவும் தொழில் கிடைக்க முடியும். ஒய்வுக் கலைஞர்களின் புகழ் பிரகாசிக்கக் கூடும் வெளியிடத் தொடர்புக்கு இடமுண்டு.

கும்பம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். வேண்டிய அளவிற்கு வெகுமதிப்பணம் துள்ளும், நீண்டநாள் கனவு இன்று நனவாகலாம்.

மீனம்; இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும், மனதில் விரக்தி தலைதூக்கும், வேண்டாத விளைவுகள் ஏற்படும், மன அடக்கம் நன்று.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை


3-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி
4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)
தொலைபேசி: 331


## நிராகரிப்பு

பெல்பாஸ்ட், ஜூலை 24

வடஅயர்லாந்தில் உண்ணாவிரதமிருந்து வரும் ஐரிஸ் குடியரசுவாதிகளின் கோரிக்கையை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சர் மீண்டும் நிராகரித்துள்ளார். சிறையில் உண்ணாவிரதம் இருந்துவரும் ஐரிஷ் குடியரசுக் கைதிகள் சிவில்உடை அணியவோ சிறைச்சாலைவில் சுதந்திரமாக உலாவவோ அனுமதிக்கப்படமாட்டார்களென்று திருமதி தட்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

## கூலிக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்கொண்டிருந்தார். இது அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டதும் உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா? நீதிபதியை நோக்கிச் சொன்னார் "இவ்வளவு நேரமும் எதிர்பக்கத்து வாதத்தை எடுத்துரைத்தேன். இனி எனது சார்பின் வாதத்தை விரிவாக உரைக்கப்போகின்றேன்" வழக்கில் வெற்றியையும் சூடினார்!

வழக்கறிஞர்கள் என்ன, சில சமயங்களில் மருத்துவர்களும் கூலிக்குமாரடிப்பவர்கள்தான். சிகரட் புகைத்தலுக்கும் புற்றுநோய்க்கும் தொடர்புண்டு என சில மருத்துவர்கள் கருத்து வெளியிட்டதும், சிகரட் கம்பெனிகள் போர்க்கொடி உயர்த்தத் தவறவில்லை. தம்மிடம் 'கொழுத்த' சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த மருத்துவர்களை முடுக்கிவிட்டார்கள். அவர்களும் 'ஆராய்ச்சி' செய்தார்கள். புகைத்தலுக்கும் புற்றுநோய்க்கும் எதுவித உறவுமில்லை என்ற முடிவுக்கும் வந்தார்கள். எதிர்பார்த்ததுதானே!

இந்த வரிசையில் இப்பொழுது சில அரசியல் 'அறிஞர்'களும் இடம்பெற்றுவிட்டனர், மதிப்பிழந்து வரும் அரசாங்கங்கள் எப்படி தமது ஆட்சிக்காலத்தை நீடிக்கலாம் என்பது குறித்து இவர்கள் புத்திமதிகூற விழைந்துள்ளனர்.

எல்லாம் செஞ்சோற்றுக் கடன்போலும்!

—வெளியான்

## அனுராவுக்கு பயமுறுத்தல்

(கொழும்பு)

மகியங்கனை நுவரெலியா எம். பி. திரு. அனுரா பண்டாரநாயக்காவைத் தாக்கப் போவதாக சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் எச்சரித்
(2-ம் பக்கம் பார்க்க)

## பழமை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

6. சமயங்களுக்கிடையில் சமரசக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு சகவாழ்வு ஏற்படுத்தி, சமூக ஒற்றுமை தழைக்கோங்க ஆவன செய்தல்.

சமூகம்:

1. சுயமரியாதை முறைகளை வகுத்துக் கையாளல், 2. மது அருந்தல், புகைத்தல், (மனமாற்றம் மூலம்) குறைத்தல்; 3. விவாக வைபவங்கள், குடும்பக் கொண்டாட்டங்கள் அனைத்தும் ஆசாரப்படி சிக்கனமாய் நடத்தல்; 4. வீடு அமைப்பு, உடை, ஆபரணங்களின் செலவினத்தை மட்டுப்படுத்தல்; 5. மரணச் சடங்குகள் விதிப்படி, சிக்கன செலவினங்கள் கையாளல்; 6 சமுதாயப் பாவனையில் சுதேசியப் பொருட்கள் முதலிடம் பெறவேண்டும்; 7. மக்கள் பரந்து வாழ, வீடு அமைப்புத் திட்டங்கள் குடாநாட்டுக்கு அப்பாலும் ஏனைய பகுதிகளில் பட்டணங்களுக்கு அப்பாலும் அமைய வேண்டும்; 8. கிராமங்களில் எழும் சமூகப் பூசல்கள், பிணக்குகள், சமரச நல்லிணக்க சபைகள் மூலம் தீர்வு காண தீர்க்கமான முறைகள் ஏற்படுத்தல்; 9. நாம் "ஒரே குலம்" என்ற தெய்வீகக் கொள்கையில், சமூகம் ஒன்றுபட்டு ஏனைய சமூகங்களுடன் "எல்லோரும் சமம்" என்ற தத்துவத்தைக் கைக்கொண்டு சகவாழ்வு அமைத்தல்.

பொருளாதாரம்:

1. பெருந்தொகையில் பலவகை மரநடுகையை ஊக்குவித்தல், 2. குடிசைக் கைத்தொழில், சிறு கைத்தொழில் விருத்தி செய்தல்; 3 நெல், தானியவகைகள், கிழங்குவகைகள் உற்பத்திப் பெருக்கமும் பாதுகாப்பும்; 4 இல்லங்களில் சுய தேவை உற்பத்திகள், வீட்டுத் தோட்டங்கள், கால்நடைகள் கோழி வளர்ப்பு; 5. இல்லங்கள்தோறும் சிறுதொகை சேமிப்பு முறைகள் கையாளல் 6 கிராமங்கள்தோறும் சேமிப்பு வங்கிகள் இயங்க வழிவகுத்தல். 7. கடல் தொழில் நவீன முறையில் விஸ்தரித்து கூடிய பலன் அடையச் செய்தல். 8. தேனி வளர்ப்பு, கோழிப்பண்ணை, பாலபண்ணை, கால்நடைகள் விருத்தி செய்தல். 9. சகல குளங்களும் புனருத்தாரணஞ் செய்து, மழைநீர் சேமித்து விவசாயத்தைப் பெருக்கம் உருவாக்கல் 10. கூட்டுறவுச் சங்கங்கள், மக்கள் வங்கி சேமிப்பு நிலையங்கள் புனரமைப்புச் செய்தல்.

எம். எஸ் கந்தையா, சித்தன்கேணி

யாழ் நகரில்
தமிழ், சிங்கள படங்களை
தொலைக்காட்சியில் விரைவில்
பார்க்கலாம்.
ஏரியல் போடத் தேவையான
ஜி. ஐ. பைப்புகளுக்கு
ரம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்

# குருபூர்ணிமா விழாவில் சொற்பொழிவுகள்




[யாழ்ப்பாணம்]
குருதேவர் சுவாமி சிவானந்தஜி மகராஜ் மகா சமாதியடைந்த பதினெட்டாவது திதியும் குருபூர்ணிமா ஆராதனையும் இன்று நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படுகின்றது.

இந்நிகழ்ச்சியில் காலை 5-30 மணிக்கு பிரஜா பிதா பிரம்மா குமாரிகள் லஷ்மி, சாந்தா ஆகியோர் இராஜயோக விளக்கம் அளிப்பார்கள்.

மாலை 5-30 மணியிலிருந்து 7-30 வரை பிரம்மஸ்ரீ சிசிவ சுப்பிரமணிய சாஸ்திரிகள். வித்துவான வசந்தா வைத்தியநாதன்' உதவி சுங்க சேகரிப்பாளர் திரு எம். ஜே. சேனரத்ன, ஜனாப் எம். ஏ.சி.ஏ. சலாம், வண யோசேப் சர்வானந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்.

## தனிநாடு கோரும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறேன்.

நடந்து முடிந்த மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் 6 மாவட்டங்களில் 5 மாவட்டங்களின் நிர்வாகத்தை மக்கள் ஆதரவுடன் கைப்பற்றியுள்ளது. இன்றும் அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது. இதன்மூலம் புலனாகிறது.

இங்கு சிலர் 'தினத்தந்தி' பத்திரிகை படிக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்கிறேன். நான்கூட அதனைப் படிப்பதில்லை.

### சிங்கள இரத்தம்...

சிங்கள இரத்தம் பற்றி இங்கு பேசப்பட்டது. 'அமிர்' தேசிய ரீதியிலான எதிர்க்கட்சித் தலைவர் அல்ல எனப் பேசப்பட்டது. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எமது ஜனாதிபதி தற்போது மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இத்தகைய பேச்சுக்கள் எந்த அளவுக்கு உதவும்.

பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ: அவர்கள் நாட்டுப் பிரிவினை பற்றிப் பேசுகிறார்கள்.

தொண்டமான்:- அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. ஐக்கிய இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் திருத்தம் கொண்டுவந்தும் சர்வசன வாக்கெடுப்பு மூலமும் தனிநாடு அமைக்கலாம்.

நெவில்:-நீங்கள் பிரிவினையை ஆதரிக்கிறீர்களா?

தொண்டமான்:- அவர்களுக்கு அதற்கு உரிமை இருக்கிறது. பேச்சு சுதந்திரம் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். அவர்களையும் பேச விடுங்கள். இங்கு மட்டுமா இனப்பிரச்சினை உண்டு? இனப்பிரச்சினை காரணமாகவே இந்தியா - பாகிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிந்தன. அதுபோல் எமது அரசியல் அமைப்பும் பிரிக்க முடியாததல்ல.

சபாநாயகர்:- பாணந்துறை எம். பி. பிரிவினையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா என்று கேட்கிறார்.

தொண்டமான்:- அவர் ஏன் என்னிடம் கேட்க வேண்டும்?

நெவில்:- கூட்டணிக்கு ஆதரவாக நீங்கள் பேசுவது போல் இருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இங்கு இல்லை. ஜனநாயக ரீதியிலேயே அவர்கள் சபையிலிருந்து வெளியேறினார்கள் என்று கருதுகிறேன். நானும் ஜனநாயக ரீதியில் நடப்பதானால் இந்த விவாதத்தை இங்கு இப்போது நடத்தக்கூடாது. இவ் விவாதத்தை எண்ணி சிலர் சிரிப்பார்கள். இவ்விவாதத்தை நடத்துவதன் அர்த்தம் என்ன? எமக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்குமானால் அவர்களது உணர்வுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

### ஜனாதிபதி, பிரதமர் குற்றவாளிகளா?

நெவில்:- எமது ஜனாதிபதியையும் பிரதம மந்திரியையும் பயங்கர குற்றவாளியாகக்கூறி இவர்கள் தேடப்படுகிறார்கள் என வெளிநாடுகளில் சுவரொட்டிகளை ஒட்டினார்களே அதனை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

தொண்டமான்:- இந்தக் கேள்வியை உம்மிடம் கேட்டால் என்ன பதில் கூறுவீர். அதுதான் எனது பதிலும். ஏன் என்னிடம் அந்தக் கேள்வியை கேட்கிறீர்கள்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன்தான் நான் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசினேன். எனது கருத்துக்களை நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் சரி இல்லாவிட்டாலும் சரி நாட்டின் நன்மைக்காகவே இவ் விவாதத்தில் பங்கு பற்றி சில கருத்துக்களை இங்கு கூறினேன்.

தொண்டமான்; நான் மனிதாபிமானத்தின் பேரில் இங்கே பேசுகிறேன். நீங்களும் நாங்களும் நானும் பேசுவதால் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. நீங்கள் இப்படியெல்லாம் பேசுவதாக இருந்தால் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக அல்லாமல் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு எதிராகப் பிரேரணை கொண்டு வரலாம்.

நெவில்: அவற்றுக்கெல்லாம் இது முதல் நடவடிக்கை.

கம்பளை எம். பி. திசநாயக்கா தற்செயலாக எதிர்க்கட்சித் தலைவராக வந்த திரு அமிர்தலிங்கத்திற்கு எதிராகவே இங்கு பிரேரணைகொண்டுவரப் பட்டுள்ளது. இப்பிரேரணை எந்த ஒரு இனத்துக்குகோ அன்றி எந்த ஒரு மதத்துக்குகோ அல்ல.

தொண்டா: திரு. அமிர்தலிங்கம் இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே எதிர்க்கட்சித் தலைவராக வந்துள்ளார். சட்டத்துக்கு முரணாக அவர் இப்பதவியை வகிக்கவில்லை.

நெவில்- அவர் இந்தியாவில் இலங்கை அரசுக்கு எதிராகப் போர் தொடுக்க உதவி கோருகின்றார்.

தொண்டா: எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையை, இந்திய அரசு அப்படியே ஏற்றுக் கொள்ளும் என எண்ணுகிறீர்களா?

நெவில்: பங்களாதேஷுக்கு உதவி செய்தது போல் இலங்கைத் தமிழருக்கு உதவியாக இராணுவத்தை அனுப்பவேண்டும் என அவர் கோருகிறார்.

தொண்டா: இது தொடர்பாக எல்லாம் அவர் இங்கு விளக்கம் அளிக்கத் தயாராக இருந்தார். நீங்கள் ஏன் அவரை இங்கு விளக்கம் அளிக்க அனுமதிக்கவில்லை -

நெவில்; அவர் இந்த விவாதத்தில் பங்குபற்றி தமது விளக்கத்தை அளித்திருக்கலாம்.

தொண்டா: தமிழ் சிங்கள இனங்களுக்கிடையிலான நல்லுறவில் களங்கம் ஏற்பட்டமையினாலேயே அவர்கள் தனிநாடு கோரும் நிலைக்குத்தள்ளப் பட்டனர். இரு இனங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு உங்களது இந்தச் செயல் ஒருபோதும் உதவமாட்டாது. அச் செயல்களின் மூலம் கடந்தஆட்சி காலத்தில் சுதந்திரக்கட்சி தமிழ் மக்களுக்கு என்ன செய்ததோ நாமும்அதையேசெய்தவர்களாவோம்.

### கூட்டணிபோல பிரச்னைகளை அணுகவேண்டும்

நானும் முன்பு தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்தேன்.

'தனிநாடு'கோரிக்கை எழுந்த போது எனது திபந்தனையைத் தெரிவித்தேன். அதற்காக அவர்கள் என்னை வெளியேற்றவில்லை. இந்த விதத்தில் தான் நாமும் பிரச்னைகளை அணுக வேண்டும்.

நெவில்: அவர்கள் வெளிநாடுகளில் பணம் திரட்டுகிறார்கள்.

தொண்டா; சாத்வீக முறையிலானது தான் அவர்களது போராட்டம்.

நெவில்: அவர்கள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

### இராணுவப் போராட்டம் நடத்துவார்களா?

தமிழ் மக்கள் உங்களுடன் இராணுவப் போராட்டம் நடத்துவார்கள் என எண்ணுகிறீர்களா? இரு இனங்களுக்குமிடையேநல்லுறவை ஏற்படுத்துவதற்குப் பாடுபட்டு வரும் எமது ஜனாதிபதியின் முயற்சிகளைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று தனிப்பட்ட ரீதியில் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நெவில்: தமிழ்நாடு சென்று அங்கு இந்தியத் தலைவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் பேச்சு நடத்துகிறார்கள்.

தொண்டா: 30 ஆண்டுகளாக இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளிப் பிரஜைகளின் பிரச்னைகள் தீர இந்தியா என்ன நடவடிக்கை எடுத்தது. என்னதான் இருந்தாலும் இதற்கெல்லாம் சுலபமான வழி எதிர்க்கட்சித் தலைவரை இங்கு நேற்று விளக்கமளிக்க அனுமதித்திருக்க வேண்டும். நீங்கள்தான் அனுமதிக்கவில்லையே.

### தமிழ் மக்களை ..

நீங்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்று கூறுகிறீர்கள். ஆனால் இங்கு நீங்கள் பேசுவதெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிரானதும்அவர்களைபாதிக்கக்கூடியதாகவும் உள்ளது. நீங்கள் இங்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகப் பேசவில்லை. தமிழ்மக்களுக்கு எதிராகப் பேசவில்லை. அவருடைய சொந்த விஷயம் பற்றி பேசுகிறீர்கள். சரித்திரம் பேசுகிறீர்கள், வரலாறு பேசுகிறீர்கள்.

திசநாயக்கா: யாழ்ப்பாணத்துக்கு வெளியில் உள்ள தமிழ் மக்களைப் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சிந்திக்கிறார்கள் இல்லை. அவர்களை மறந்து விட்டனர்.

தொண்டா; அவர்களைப் பற்றி கவனிக்க நானும் நீங்களும் இருக்கிறோம்.

ஒரு குரல்: இதற்கென்ன தீர்வு?

தொண்டா; அதற்கான பொறுப்பை எமது ஜனாதிபதியிடம் விட்டுவிடுங்கள். [ம-இ]

## அலங்கார உற்சவம்

[சுழிபுரம்]

சித்தன்கேணி பிரதான வீதியில் எழுந்தருளியுள்ள ஞான வயிரவசுவாமிக்கு அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தினமும் மாலை ஆறுமணிமுதல் அபிஷேக பூசை ஆராதனைகளும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்று பத்தாவது தினமான ஆகஸ்ட்மாதம் 3ம் திகதி திங்கட்கிழமை பசல் விசேஷ சங்காபிஷேகமும் நடைபெற்று இரவு சுவாமி வீதிவலம் வருதல் நடைபெறும்.

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன்' ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சிகள்- மற்றும் P. M. G. [Radio Officer] பயிற்சி ஆகியன ஆரம்பம் 2-8-81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம், 11, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 0422

## பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது

சென்னை, ஜூலை. 24
கோயம்புத்தூரில் நேற்று பத்திரிகை அலுவலகமொன்று தாக்கப்பட்டது தொடர்பாக பதினொருபேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

'தினகரன்', 'மாலைமுரசு' ஆகிய பத்திரிகைகளை வெளியிடும் பத்திரிகை அலுவலகமே தாக்கப்பட்டது. இப்பத்திரிகைகள் தி. மு. க. சார்பானவையாகும்.

## சின்னையா காலமானார்

[யாழ்ப்பாணம்]

'ஈழநாடு' ஸ்தாபனத்தில் இயந்திரப் பகுதியில் கடமையாற்றிய திரு. கே. டபிள்யூ. சின்னையா காலமானார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று உரும்பராயில் நடைபெறும்.

## ஜேர்மன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டனர் என்றும் இவர்களை ஏன் கூட்டிச் செல்கிறார்கள் என ஜெர்மன் பத்திரிகையாளர்கள் கேட்ட போது அது எமது உள்நாட்டு விவகாரம் என பொலிசார் தெரிவித்ததாகவும் தெரிகிறது.

அடுத்து இளைஞர்கள் பொலிசாரால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

பத்திரிகையாளர்கள் 28 பேரும் இன்டர் கொண்டினென்டல் ஹோட்டலுக்கு அழைத்துவரப்பட்டு மீண்டும் நேற்று அதிகாலை 6மணிக்கு ஜெர்மன் திருப்பி அனுப்பப்பட்டனராம்.

இவர்களுக்காக மேற்குஜெர்மன் தூதரகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் மகாநாடும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் பணிப்பின் பேரில்நடத்த அனுமதிக்கப்படவில்லை என்று தெரிகிறது.

கூட்டணி எம். பி. க்களும், தலைவர்களும் பத்திரிகையாளர்களும் ஜெர்மன் பத்திரிகையாளர்களைச்சந்திக்க முயன்றபோதிலும் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லையாம்.

ஹோட்டலில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

[ம-இ]

## இன்று நடைபெறும் நடன நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

கவிஞர் வேல் ஆனந்தனின் பிரதம மாணவியான செல்வி பத்மினி நடராசா அளிக்கும் கதகளி நடன நிகழ்ச்சி இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே.கைலாசபதி தலைமை தாங்குவார். [ம-வெ]

## ஆலால——

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரத்தை யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர்களும், பணியாளர்களும், பொது மக்களும் ரயில் நிலையத்தில் வரவேற்பார்கள்.

இதனைத் தொடர்ந்து திரு. ஆலாலசுந்தரத்தைக்கௌரவிக்கும் வகையில் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெறியாளர் பணியாளர்கள் சார்பில் மதியபோசன விருந்து அளிக்கப்படும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SriLanka
Regd No. QB 100286/81. P. O. Box 49, Jaffna: தொலைபேசி: 7707, 389, 8126